
# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

நவம்பர் 2019
திபி 2050 . மலர் 1 . இதழ் 8



# பதிப்புரை

புரட்சியாளர்கள் விதைக்கப்படுகிறார்கள்.

தமிழினத் தலைவர் பிரபாகரன் அவர்கள் விதைத்த விதைகள் இன்று முளைவிடத் துவங்கியுள்ளன.

பிராபாகரன் என்ற ஆளுமையைக் கடந்து பிராபாகரம் எனும் கருத்தியலாக உருவெடுத்துள்ளதை நாம் காண்கிறோம்.

நாமும் விதைத்துக் கொண்டே இருப்போம்.

ஒரு நாள் விதை விருட்சமாகும்

ஆசிரியர் குழு

## இவ்விதழில்


1. தலைவரின் சிந்தனைகள்
2. தமிழ்நாட்டில் அதிவேக ரயில்
3. மக்கள் களம்


"எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."

\- தலைவர் பிரபாகரன்




- மாவீரர்கள்
காலத்தால்
சாவதில்லை .
அவர்கள்
காலத்தை உருவகிப்பவர்கள்



- உழைப்பவனே பொருளுலைகைப்
படைக்கின்றான். மனித
வாழ்க்கையின் அடிப்படைத்
தேவைகளைப் பூர்த்தி
செய்தின்றான்.

- மக்களின்
துன்ப
துயரங்களில்
பங்கு கொண்டு,
அவர்களது கஸ்டங்களைப்
போக்குதற்குத்
திட்டமிட்டுச்
செயலாற்றுவதுதான்
உண்மையான
அரசியல் வேலை .
*விழிப்புத்தான்
விடுதலைக்கு முதல்
படி





- மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டு அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி அவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்குத் திட்டமிட்டுச செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.

- "…நான் பேச்சுக்குத் தருவது குறைந்தளவு முக்கியத்துவமே : செயலால் வளர்ந்த பின்புதான் "...நாம் பேசத் தொடங்கவேண்டும்





- அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரம் செலுத்தும் விவகாரம் அல்ல அரசியல் என்பது . .மக்களுக்குச் சேவை புரியும் பணி மக்களின் நல்வாழ்வுக்கு .ஆற்றுப்படும் தொண்டு

மும்பைக்கும் அகமதாபாத்துக்கும் இடையே அதிவேக ரயிலுக்கானப் பணியை நடுவண் அரசு செய்து வருகிறது தமிழகத்திற்கு . அதிவேக ரயில் அவசியமா என்பதை கொஞ்சம் அலசுவோம்.

புல்லட் ரயில் என்பதும், அதிகபட்சம் 320 கிமீ வரை செல்லும் தொடர் வண்டியாகும் .

சராசரி வேகம் 250 கிமீ ஆக இருக்கும்.

தமிழகத்தின் முக்கிய நகரங்களாக இருக்கிற சென்னையிலிருந்து கோவையும், மதுரையும் ஏறக்குறைய 500 கிமீ தொலைவில் உள்ளன. எனவே, 2 மணி நேரத்தில் , புல்லட் ரயிலில் சென்றடைய முடியும்.


சென்னையிலிருந்து நாகர்கோவில் செல்ல 3 மணி நேரம் மட்டுமே ஆகும்.

இதுதவிர, ஓசூர் - நாமக்கல் - கரூர் நீட்டிப்பு செய்யப்படலாம்.

**தடம் 1**

சென்னை - புதுச்சேரி - கடலூர் - நெய்வேலி - கும்பகோணம் - தஞ்சை - திருச்சி - திண்டுக்கல் - மதுரை - தூத்துக்குடி - திருநெல்வேலி - நாகர்கோவில்.


தூரம் - ஏறக்குறைய 750 கிமீ



**தடம் 2**

சென்னை - காஞ்சிபுரம் - வேலூர் - திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி - சேலம் - ஈரோடு - திருப்பூர் - கோவை

தூரம் - ஏறக்குறைய 500 கிமீ




**தமிழகத்தில் இதனால் என்னென்ன மாற்றங்கள் ஏற்படலாம்?**

1. வளர்ச்சி பரவலாகும். இதன் மூலம் தமிழகத்தின் எந்த மூலையிலிருந்தும் மற்றொரு மூலைக்கு அதிகபட்சம் 3 மணி நேரத்தில் செல்ல முடியும். நீங்கள் கோவையில் உங்கள் தொழிலகத்தை அமைத்துக் கொண்டு, சென்னைக்கு காலையில் வந்து வர்த்தகம் பேசிவிட்டு, மாலையில் வழக்கம்போல வீட்டுக்குச் செல்ல முடியும்.

2. சாதாரணமாக ஒரு நான்கு வழிச்சாலைக்குத் தேவைப்படுவதில் நான்கில் ஒரு பங்கு நிலம் மட்டுமே ஒரு இருவழி ரயில் பாதைக்குத் தேவைப்படும். ஆனால், 6 மடங்கு அதிகம் போக்குவரத்தை நடத்த முடியும். மேலும், புல்லட் ரயில்கள் பெரும்பாலும் பாலத்தின் வழியே தான் நடைபெறும். எனவே, எட்டு வழிச்சாலையெல்லாம் தேவையில்லாமல் போகும்.

3. சாலைகளில் வண்டிகள் எண்ணிக்கைக் குறைய வாய்ப்புண்டு. இதன் மூலம் விபத்துகள் குறையும் வாய்ப்புண்டு. தமிழகம் வருடத்திற்கு 10,000+ உயிர்களை விபத்துகளில் இழக்கிறது.

4. பொதுவாக, 500 கிமீ - 750 கிமீ தொலைவுப் பயணங்களுக்கு விமான பயண நேரமும், புல்லட் ரயில் பயண நேரமும் கிட்டத்தட்ட சமமாக

இருக்கும். ( விமானத்தில் செல்ல, பாதுகாப்பு கெடுபிடிகளுக்கான நேரம் எல்லாம் சேர்த்து ). எனவே, விமானப் போக்குவரத்து குறையும். விமான நிலையங்களில் போக்குவரத்து நெருக்கடி குறையும்.


5. விமானங்களைவிட புல்லட் ரயில்கள் நம்பகம் மிகுந்தவை, பாதுகாப்பானவை. அவை காலச்சூழ்நிலைகளால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. சுற்றுச்சூழலுக்கும் நல்லது.

முதலில் 2 வழிச் சாலை இருந்தது. பின் அதுப் போதாமல், 4. இப்போது 6 அல்லது 8 வழிச் சாலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், என்னைப் பொறுத்தவரை, 16 வழி போட்டாலும், இந்தியாவின் மக்கள் தொகைக்குப் போதாது.

தமிழகம் மிக அதிக வாகனங்கள் கொண்ட மாநிலம். எனவே, சாலையை விரிவுபடுத்திக் கொண்டே போவதை விட்டுவிட்டு, ரயிலுக்கு மாறுவதே தமிழகத்திற்கு நல்லது. 70 - 80 களில் சாலைப்போட நாம் செலவழித்தத் தொகைதான், இன்று தமிழகத்தில் வளர்ச்சியைக் கொண்டு வந்துள்ளது. எனவே, இந்த செலவு மிக முக்கியமானது.







இராவணன் குடில்
கதவு எண். 8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை - 600116.
itew@naamtamilar.org | www.naamtamilar.org | +91 89398 66242